**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.01/2023**
**Prosecution Witness**:7

| | | | |
|---|---|---|---|
| Name | (P.W.7) A.Ravi | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th **day February 2026** by Arulkumar M.C. DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது ஈரோடு தாலுக்கா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.12.2021ம் தேதி நான் கொடுமுடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்தபோது, கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற இன்டிமேசனை பெற்று மருத்துவமனை சென்று விசாரித்தபோது இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட பார்வதி, செல்வராஜ் ஆகியோர்கள் மேல்சிகிச்சைக்காக கோவை ராயல்கேர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விவரம் அறிந்து அன்றைய தினமே 13.00 மணிக்கு கோவை ராயல்கேர் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டம், கூடுதுறை, ஓலப்பாளையத்தைச் சேர்ந்த கிருஷ்ணரெட்டியார் மகன் செல்வராஜ் என்பவர் மயக்க நிலையில் இருந்த அதே விபத்தில் காயமடைந்த அவரது மனைவியான பார்வதி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து 11.12.2021ம் தேதி 18.30 மணிக்கு நிலையம் வந்து மேற்படி புகார் வாக்குமூலத்தின் பேரில் கொடுமுடி காவல்நிலைய குற்ற எண். 365/2021, ச/பி.279, 337 இதச ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்ய கோரப்பட்டது. அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்பு வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் மற்றைய

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.09 15:24:15 +0530

நகல்களை சம்மந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக கொடுமுடி காவல் உதவி ஆய்வாளர் ஸ்ரீராமன் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பு) :-**

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.09 15:24:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.